**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 13 (2020) | ஐரோப்பிய வரலாறு – I | நேரம் :- 3 மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**கவனிக்க.**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுக்க.
- வழங்கப்பட்டுள்ள நேரம் பகுதி I, பகுதி II இற்கும் உரியதாகும்.

- *1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.*

1) 1. ஸ்பாட்டா 2. தீபஸ் 3. கிரிமியா
4. கொரிந்த் 5. மிலேடஸ் ( )

2) 1. பொஸ்பரஸ் 2. பிரினீஸ் 3. அல்ப்ஸ்
4. அப்பினைன்ஸ் 5. கோகசஸ் ( )

3) 1. பெற்றாக் 2. மாக்கியவல்லி 3. பிரகர்ஸ்
4. தோமஸ்மூர் 5. இராஸ்மஸ் ( )

4) 1. சலேர்ணோ 2. விற்றன்பேர்க் 3. பொலொஞ்ஞா
4. பதுவா 5. நோப்பில்ஸ் ( )

5) 1. கஸ்ரீஸ் 2. அரகன் 3. நோமண்டி
4. கிரனடா 5. நவார் ( )

6) 1. பாராளுமன்றம் 2. கோர்ட்டேஸ் 3. ஸ்ரேட்ஸ் ஜெனரஸ்
4. ஸ்ராக்சேம்பர் 5. பஸ்ரீல் ( )

7) 1. பியூப்லொஸ் 2. அஸ்ரெக்கர் 3. மாயா
4. இன்காவர் 5. ஹீணர் ( )

8) 1. திரபல்கார்போர் 2. ஒஸ்ரலிற்ஸ்போர் 3. மஜென்ராபோர்
4. ஜோனாபோர் 5. லிபஸிஸ்போர் ( )

9) 1. ஏக் - லா – சப்பெல் 2. றொப்போ 3. லைபாச்
4. விலாபிறாங்கா 5. வெறோனா ( )

10) 1. லெபனான் 2. நைஜீரியா 3. இஸ்ரேல்
4. சிரியா 5. ஜோர்தான் ( )

- ***11 – 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

11) 1. ஹோமர் - ஒடிசி
2. சொபகிளிஸ் - ஈடிபஸ் ரெக்ஸ்
3. சோக்கிரடீஸ் - இலியாட்
4. பிளேட்டோ - குடியரசு
5. தியூசிடிபீஸ் - வரலாறு ( )

12) 1. பிளேட்டோ - அக்கடமி
2. அரிஸ்டோட்டில் லைசியம்
3. தோமஸ் அக்குயினாஸ்- சுமாதியாலோஜியா
4. இராஸ்மஸ் - மடைமையின் புகழ்ச்சி
5. மார்டின் லூதர் கடவுளின் நகரம் ( )

13) 1. வலோய் - பிரான்ஸ்
2. பிறகன்ஸா - ஸ்பெயின்
3. ஒரேஞ் - நெதர்லாந்து
4. நோமனேன் - ரஷ்யா
5. சவோய் - இத்தாலி ( )

14) 1. நூற்றாண்டுப் போர் - இங்கிலாந்தும் ஸ்பானியாவும்
2. றைல் யுத்தம் - பிரான்சும் இங்கிலாந்தும்
3. ஜோனாப் போர் - பிரான்சும் பிரஷ்யாவும்
4. மஜண்டாப் போர் - சார்டீனியாவும் ஒஸ்திரியாவும்
5. ஏழுவாரப் போர் - ஒஸ்திரியாவும் பிரஷ்யாவும் ( )

15) 1. யேசூற் - ஒரு கத்தோலிக்க சமயப் பிரசாரச் சங்கம்
2. கர்போனாறி - ஒரு இரகசிய இயக்கம்
3. சோல்வரைன் - சங்கவரிகள் பற்றிய ஓர் இயக்கம்
4. மூலதனம் - லெனின் எழுதிய நூல்
5. ஜிம்கர் - பிரஷ்ய நிலவுடைமைப் பிரதானிகள் ( )

- ***16 – 20 வரையான வினாவுக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

16)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | செயாஸ் | A. | காதல் தெய்வம் |
| 2. | அதீனா | B. | மதுபானத் தெய்வம் |
| 3. | அப்பபோடைற் | C. | கடற் தெய்வம் |
| 4. | பொசிடொன் | D. | வானத்து தெய்வம் |
| 5. | டயனீஸஸ் | E. | ஞானம் போர் என்பவற்றின் தெய்வம் |

1. DCEAB 2. CEABD 3. DEACB 4. BEACD 5. EDACB ( )

17) X Y

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | ரைபர் நதி | A. | ஆங்கிலக் கால்வாய் |
| 2. | டனியுப் நதி | B. | வடகடல் |
| 3. | ஸைன் நதி | C. | மத்தியதரைக்கடல் |
| 4. | எல்ப் நதி | D. | போல்ரிக்கடல் |
| 5. | விஸ்ரியுல்லா நதி | E. | கருங்கடல் |

1. DCEAB  2. CEABD  3. DEACB  4. BEACD  5. EDACB  (   )

18)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | பார்த்தனன் | A. | மொஸ்கோ |
| 2. | கொலோஸியம் | B. | லண்டன் |
| 3. | கிராம்ளின் | C. | உரோம் |
| 4. | வெஸ்ற் மினிஸ்டர் மாளிகை | D. | பாரிஸ் |
| 5. | நோற்றேடாம் தேவாலயம் | E. | எதென்ஸ் |

1. DCEAB  2. DCEBA  3. DEABC  4. EACDB  5. ECABD  (   )

19)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | லுனிவில் ஒப்பந்தம் | A. | ரஷ்யாவும் ஒட்டோமன் துருக்கியும் |
| 2. | பிராங்பேர்ட் ஒப்பந்தம் | B. | ரஷ்யாவும் ஜப்பானும் |
| 3. | சான்ஸ்ரிபனோ ஒப்பந்தம் | C. | பிரான்சும் ஆஸ்திரியாவும் |
| 4. | போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் | D. | ரஷ்யாவும் ஜேர்மனியும் |
| 5. | பிறெஸ்ற் - லிற்றோவஸ்க் ஒப்பந்தம் | E. | பிரான்சும் ஜேர்மனியும் |

1. BEACD  2. CEABD  3. DCEAB  4. DEACB  5. EDACB  (   )

20)

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | ஜோன்கே | A. | வானொலி |
| 6. | தோமஸ் நிவ்கொமன் | B. | புகைக்கப்பல் |
| 7. | றோபட் பூல்மன் | C. | மோட்டார் வண்டி |
| 8. | டெம்ளர் | D. | நீராவி இயந்திரம் |
| 9. | மார்க்கோணி | E. | பறக்கும் நாடா |

2. DECAB  2. EDBCA  3. BAEDC  4. ABECD  5. CAEBD  (   )

- **21 – 25 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்கு பொருந்தவில்லை அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) இஸ்லாம் மார்க்கம்.
1. கி.பி 570 இல் மக்காவில் பிறந்த முகமதுநபி அவர்கள் அதன் ஆரம்ப கர்த்தாவாவார்
2. கி.பி 670 இல் முகமதுநபி அவர்கள் அல்லாவின் செய்தியை உலகுக்கு அறிவித்தார்
3. இஸ்லாம் மதம் பல கடவுள் கொள்கையுடையது
4. இஸ்லாமியரின் புனித நூல் குர் - ஆன் எனப்படும்
5. இறைவணக்கம், நோன்பு, மக்கா பயனம் என்பன இஸ்லாமிய சமய சடங்குகளில் சிலவாகும்

(   )

22) புவியியற் கண்டுபிடிப்புக்கள்.

1. தென்னாபிரிக்க முனையை பர்தலோமியஸ் அடைந்தமை
2. கிறிஸ்தோபர் கொலம்பஸ் புதிய உலகத்தை கண்டு பிடித்தமை
3. கப்ரால் நியூபவுண்லாந்தை அடைந்தமை
4. வாஸ்கொடகாமக கள்ளிக்கோட்டையை அடைந்தமை.
5. மகலன் பூமியைச் சுற்றி பிரயாணஞ் செய்தமை. ( )

23) இங்கிலாந்தின் பாராளுமன்றம்.

1. மகாபட்டயம் பாராளுமன்ற உருவாக்கத்தின் ஆரம்ப கட்டத்தை குறிக்கின்றது
2. தனது சமய நடவடிக்கைகளுக்கு 8 ஆம் வெறற்றி பாராளுமன்றத்தின் உடன்பட்டினை பெற்றுக்கொண்டான்
3. ஸ்ருவேட் மன்னர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையில் தகராறுகள் ஏற்பட்டன
4. 1688 இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது
5. ஹனோபர் வம்ப அரச காலத்தில் பிரதம மந்திரியின் பதவி வலுவான அதிகாரத்தைப் பெற்றது ( )

24) கைத்தொழில் புரட்சி

1. இங்கிலாந்தில் தொடங்கியது
2. தொழிற்சாலை முறை அபிவிருத்தியடைந்தது
3. தொழிலாளர் வர்ககம் எழுச்சி பெற்றது
4. தனியார் துறை முயற்சிகள் முன்னேற்றம் அடைந்தன
5. சுற்றாடல் பாதுகாக்கப்பட்டது

( )

25) நெப்போலியன் பொனபார்ட்

1. 1804 இல் நெப்போலியன் பிரான்ஸின் சக்கரவர்த்தியானார்
2. அவர் பிரான்ஸின் எல்லைகளை விரிவுபடுத்தினார்
3. நெப்போலிய சட்டத்தொகுப்பை வெளியிட்டார்
4. அவர் வட்டர் லூ என்னும் இடத்தில் எதிரி படைகளை பலமாக தோற்கடித்தார்
5. நெப்போலியனை புரட்சியின் குழந்தை என கருதுவர் ( )

❖ **26 – 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A) (B) (C) (D) என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து.**

**(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் ……………… 1 எனவும்**

**(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 2 எனவும்**

**(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் ……………... 3 எனவும்**

**(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் ……………... 4 எனவும்**

**ஒருவிடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| அறிவுறுத்தல்கள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A) யும் (B) யும் மட்டும் சரி | (B) யும் (C) யும் மட்டும் சரி | (C) யும் (D) யும் மட்டும் சரி | (A) யும் (C) யும் மட்டும் சரி | ஒருவிடை அல்லது இரண்டுக்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் |

26) எதிர்மத சீர்திருத்தம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் எது / எவை சரியானவை?

A) உரோமன் கத்தோலிக்க திருசபைக்கு எதிரான இயக்கமாக எதிர்மதச் சீர்திருத்தம் எழுச்சி பெற்றது

B) எதிர்மதச் சீர்திருத்ததின் ஒரு முக்கிய மூலமாக யேசு சபை காணப்பட்டது

C) ஸ்பெயினில் 1479 மத விசாரனை மன்று ஏற்படுத்தப்பட்டது

D) புரட்டஸ்தாந்துக் கோட்பாடுகளை றென்றில் கூடிய சபை வரையறுத்து தெளிவாக்கியது

( )

27) ஐரோப்பாவில் தேசிய அரசு தொடர்பாகப் பின்வரும் எக்கூற்று / கூற்றுக்கள் சரியானது

A) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற முக்கிய அரசியல் அமைப்பு தேசிய அரசு எனப்பட்டது

B) பிரான்ஸ் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் தேசிய அரசுகள் தோற்றம் பெற்றன

C) பலம் வாய்ந்த மத்திய அரசு உருவானது

D) நிலையான புவியில் எல்லைகள் நாடுகளுக்கு உருவானது

( )

28) மேல்வரும் கூற்றுக்களில் கிறிஸ்தவம் தொடர்பாக எது/ எவை சரியானது / சரியானவை

A) கிறிஸ்தவ சமயம் ஒரு கடவுள் வழிபாட்டு நெறியாகும்

B) யேசு கிறிஸ்து ஒரு கிரேக்கராவார்

C) கிறிஸ்தவ சமய அடிப்படையில் செயல் கடவுள் மீட்பவர் ஆவார்

D) மிலான்பிரகடனம் கிறிஸ்தவர்களுக்கு வழிபாடு சுதந்திரத்தை வழங்கியது

( )

29) மேல்வருவோருள் பிரெஞ்சுப் புரட்சித் தலைவர்கள் யாவர்?

A) கலோன் B) மிராபோ C) அபேசயிஸ் D) ற்ராலிரோண்ட்

( )

30) மேல்வருவனவற்றுள் ஜேர்மனியை இனைப்பதற்கு சாதகமாக அமைந்த காரணங்கள் யாவை?

A) ஒஸ்ரியா வழங்கிய ஆதரவு

B) சோல்பரைன்

C) பிஸ்மார்க்கின் ராஜதந்திர ஆற்றல்

D) அல்சேல்லொரையின் என்பவற்றை பிரான்ஸ் ஜேர்மனிக்கு வழங்க உடன்பட்டமை.

- **இல 31 – 35 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அடைப்புப் புள்ளிக்கோட்டில் அதன் இலக்கத்தை எழுதுக.**

31) பரிசுத்த உரோமப் பேரரசு என தனது அரசுக்கு பெயரிடடவர்.

1) கொன்ஸ்தாந்தின் 2) தியோடசியஸ் 3) குளேவிஸ்
4) சாளிமன் 5) அகஸ்டஸ்சீசர்

32) நாடுகாண் பயணங்களில் முதலில் ஈடுபட்ட நாடு.

1) ஜேர்மனி 2) போர்த்துக்கல் 3) ஒல்லாந்து
4) ஸ்பானியா 5) பிரான்ஸ்

33) முப்பதாண்டுப் போரில் ஈடுபட்ட நாடு.

1) டென்மார்க் 2) ரஷ்யா 3) போலாந்து
4) நோர்வே 5) இங்கிலாந்து

34) அமெரிக்க சுதந்திரப் போருக்கு தலைமை வகித்தவர்.

1) லிங்கன்
2) மொன்ரோ
3) வோசிங்டன்
4) ஜெபர்சன்
5) ஜக்சன்

35) பிரான்சுப் புரட்சியின் பிரதான கட்டங்கள்

1) ஸ்ரேற் ஜெனரல் கூடியமை
2) பஸ்ரீல் கோட்டையைத் தகர்த்தமை
3) குடியரசுப் பிரகடனம்
4) லூயி XVII முடி சூட்டப்பெற்றமை
5) பயங்கர ஆட்சி

- **இல 36 – 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிகளுக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகவும் பொருந்துவதை எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதும் முதல் கூற்றினை நன்றாக விளக்குவதாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 36) | கிரேக்க – பாரசீக யுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு ஹெரடோற்றஸ் எழுதிய தனது 'வரலாறு' என்ற நூலே அவரை 'வரலாற்றின் தந்தை' எனக் குறிப்பிட வைத்தது. | கிரேக்கரிடையே வரலாறு பற்றிய பாடப்பரப்பை அறிமுகப்படுத்திய ஹெரடோற்றஸ் சில சந்தர்ப்பங்களில் தனது மூலாதாரங்களைப் பரிசீலனை செய்து பாரசீக யுத்தத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதனைக் கண்டறிவதில் முயற்சி செய்தார். ( ) |
| 37) | கிரேக்கர் ஒரு பொதுவான மொழி பண்பாடு ஆகியவற்றைக் கொண்டிருந்த பொழுதிலும் அவர்கள் அரசியல் அடிப்படையில் பிரிந்திருந்தனர். | ஒவ்வொரு நகராட்சியினையும் பேணிக் கொள்வதில் கிரேக்கர்கள் உறுதி கொண்டிருந்ததால் பெருமளவான பகுதிகளைக் கொண்ட அரசியல் இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. ( ) |
| 38) | 'Gold God and Glory" என்ற பொன், தெய்வம், கீர்த்தி எனும் வெளிப்பாட்டிலிருந்து ஸ்பானிய நாடுகாண் பயணத்தின் பிரதான நோக்கம் தெளிவாகப் புலப்படுகிறது. | ஸ்பானிய இனத்தவரான பேத்ரோ அல்வாரிஸ் கப்ரால் மெக்சிக்கோவைக் கைப்பற்றினார். ( ) |
| 39) | ஒலிவர் குரோம்வெல்லின் தலைமைத்துவத்தின் கீழ் பாராளுமன்ற சட்டத்திற்கமைய மாண்புமிகு புரட்சியின் போது முதலாம் சாள்ஸ் என்பவர் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார். | இங்கிலாந்திலே பாராளுமன்ற ஆட்சி சட்டம் வழியான ஆட்சி என்னும் கோட்பாடுகளை மாண்புமிகு புரட்சி வலுப்படுத்தியதாக கருதப்படுகின்றது. ( ) |
| 40) | மாட்டின்லூதர் விற்றன்பேர்க் தேவாலயத்தின் முன்வைத்த 95 நியாயங்கள் சமயப்பிரிவினைக்கு வித்திட்டது. | ஏழாண்டுப் போர் ஐரோப்பாவின் இறுதிச் சமயப் போராகக் கொள்ளப்படுகின்றது. ( ) |

FWC

| தரம் :- 13 (2020) | ஐரோப்பிய வரலாறு II | |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :

- முதலாம் வினா கட்டாயமானது.
- அத்துடன் பகுதி B இலிருந்து ஒரு வினாவையேனும் பகுதி C இலிருந்து ஒரு வினாவையேனும் தெரிவு செய்து எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடை தருக. (முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய வினாக்களின் மொத்த எண்ணிக்கை நான்கு ஆகும்).
- முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.

## பகுதி A

1) கீழே தரப்பட்ட இடங்களை ஐரோப்பிய புற உருவப்படத்தில் குறிக்க.

| | | | |
|---|---|---|---|
| 1. றைன்நதி | 2. பொஸ்பரஸ் | 3. மன்செஸ்டர் | 4. வடகடல் |
| 5. பேர்லின் | 6. வார்சோ | 7. ஒல்லாந்து | 8. சென்பீற்றஸ்பேர்க் |
| 9. ஸ்பாட்டா | 10. ஈஜியன்கடல் | 11. அஸ்திரியா | 12. சிசிலி |

## பகுதி B

2) ஐரோப்பிய வரலாற்றில் உரோமர் காலம் ஆட்சிமுறைகள் தொடர்பில் மிக முக்கியத்துவம் பெறுகின்ற காலகட்டமாகும்.
   1. உரோம மன்னர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (3 புள்ளிகள்)
   2. உரோம இராட்சியத்தின் அமைவிடத்தை தருக. (3 புள்ளிகள்)
   3. உரோமரின் குழு ஆட்சி கொண்டிருந்த சிறப்புகளைக் குறிப்பிட்டு தெளிவுற விளக்குக. (10 புள்ளிகள்)

3)
   1. மறுமலர்ச்சி தோற்றம் பெறுவதற்கு வழிவகுத்த காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க. (8 புள்ளிகள்)
   2. நவீன வரலாற்றில் மறுமலர்ச்சியின் முக்கியத்துவத்தைப் பற்றி பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

4) மத்தியதர வர்க்கம் பிரெஞ்சுப் புரட்சியினைத் தொடங்கியது அதுவே கூடுதலான பயன்களையும் பெற்றது.
   1. பிரெஞ்சுப் புரட்சி ஏற்படும் சமயத்தின் கூட்டப்பெற்ற பிரதிநிதித்துவச் சபையின் பெயரை எழுதுக. (1 புள்ளி)
   2. பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்ட பொழுது பிரான்சில் ஆட்சி புரிந்த அரசரதும் அரசியினதும் பெயரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
   3. பரட்சிக்கு முற்பட்ட பிரான்ஸிஸ் நிலவிய சமூகக் கட்டமைப்பினைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)
   4. பிரெஞ்சு புரட்சியின் விளைவுகளைக் குறித்து முன்னே தரப்பட்ட கூற்றினை நுனுக்கமாகப் பரிசீலனை செய்க. (8 புள்ளிகள்)

5) கீழே தரப்பட்டவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. மாட்டின் லூதர்
2. இங்கிலாந்தில் ஏற்பட்ட 1688 ஆம் ஆண்டு புகழ்மிக்க புரட்சி
3. கிரேக்க நகர அரசுகள்
4. கைத்தொழில் புரட்சி
5. மானிய முறை

(2x8=16 புள்ளிகள்)

## பகுதி C

6) "பிஸ்மார்க்கின் தலைமையில் ஜேர்மனியை ஒன்றிணைக்க மேற்கொள்ளப்பட்ட கட்டம் ஒவ்வொன்றும் போரில் முடிந்தது"

1. ஜேர்மனியை ஒன்றாக இணைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்ட அரசின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
2. அந்த இராச்சியத்தின் தலைமையில் ஏற்பட்ட சுங்கவரி விலக்கு ஒன்றியத்தின் பெயரைக் குறிப்பிடுக. (1 புள்ளி)
3. 1815 – 1848 ஆகிய காலத்தில் ஜேர்மனியை இணைப்பதற்கு எதிராகவிருந்த தடைகளைச் சுருக்கமாக குறிப்பிடுக. (6 புள்ளிகள்)
4. பிஸ்மார்க்கின் தலைமையில் ஜேர்மனியை ஒன்றினைத்தமையின் பிரதான கட்டங்களை விளக்குக. (8 புள்ளிகள்)

7) பிரெஞ்சுப் புரட்சியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நெப்போலியன் போனபாட் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றான்.

1. நெப்போலியன் போனபாட் எங்கு பிறந்தார். (1 புள்ளி)
2. அவர் தனது இராணுவக் கல்வியை எங்கு பெற்றார். (1 புள்ளி)
3. அவர் பிரான்சின் சக்கரவர்த்தியாகும் வரை அவரது வாழ்க்கை வரலாற்றைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)
4. மேற்குறித்த குறிப்பினை நெப்போலியன் போனபாட்டின் உள்நாட்டுக் கொள்கைகளுடன் தொடர்புபடுத்தி நுணுக்கமாக பரிசீலனை செய்க. (9 புள்ளிகள்)

8) மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் எவ்வாறு ஐரோப்பாவில் 1ம் உலகப்போர் ஏற்பட்டது என்பதனை பரிசீலனை செய்க.

1. புதிய ஏகாதியந்தியம்
2. பாதுகாப்பு உடன்படிக்கை முறைகள்
3. போல்கள் நெருக்கடி (16 புள்ளிகள்)

9) கீழே தரப்பட்டவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. பாசிசம்
2. சொல்வரைன்
3. ஜோசப் ஸ்ராலின்
4. கவுன் கபூர்
5. சர்வதேச சங்கம்